**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் - 2021**

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு கொழும்பு மாநகர சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆந் திகதிய 2557 ஆம் இலக்க மற்றும் 2558 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயற்திட்ட நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளன. முன்னேற்றப்பட்ட கடற்கரையோர மற்றும் நாடளாவிய நீர்த்தரத்தின் விளைவாக தூய்மை மற்றும் சுகாதார நிலைமையை முன்னேற்றுவதனூடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள 1.5 மில்லியன் நகர மற்றும் புறநகர் குடியிருப்பாளர்களிற்கான நகர அபிவிருத்தி மற்றும் பொதுச் சுகாதாரத்தை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. (அ) கழிவு நீர் அடிப்படை வசதிகளை தரமுயர்த்தல். (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவத்தின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு இயலுமையை உறுதிப்படுத்தல், நிதி முகாமைத்துவம், செயற்பாட்டு செயற்திறனை கண்காணித்தல், சுற்றாடல் ஒழுங்குமுறைமை இணக்கப்பாடு, நுகர்வு சேவை மற்றும் முறையான சுத்தப்படுத்தல் சேவைகள். (இ) செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாக ஆதரவு எனப்பெயரிடப்பட்ட கொழும்புப் பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவக் கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 12,597.11 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110.24 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 10,783.65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.37 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 1,813.46 மில்லியனிற்கு சமனான ஐ.அமெரிக்க டொலர் 15.87 இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் முடிவுறுத்தல் திகதியானது 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையியும் காசுப்பாய்ச்சல் கூற்றினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி-யொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்தின் 9.3 ஆம் பிரிவு | வழிகாட்டல் குழு குறைந்தது இரு மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டப்பட வேண்டும். இருப்பினும், 2021 ஆம் ஆண்டிற்குள் நான்கு வழிகாட்டல் குழு கூட்டங்கள் மாத்திரம் இடம் பெற்றுள்ளது. | சுகாதார அதிகாரசபைகளால் அமுல்படுத்தப்பட்ட பிரமாணங்களுடன் இணங்குவதன் மூலம் கூட்டமொன்றை ஒழுங்குபடுத்துவது மிகவும் கடினமாகவிருந்தது. | மாற்றுவழியாக நிகழ்நிலை கூட்டங்கள் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

| கூறு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் | அடையப்பட்ட செயன்முன்னேற்றம். | | |
| | சதவீதம் | சதவீதம் | | |
| <u>**பிரதான கழிவு நீர் முறைமையானது மறுசீரமைத்தல்**</u><br>கழிவு நீர் உந்தி நிலையம் மற்றும் உந்தி பிரதானங்களை வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் மறுசீரமைப்பு | | | செயற்திட்டமானது 2010 ஏப்ரல் 09 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 30 இல் அதனை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரையிலும் 4 தடவைகள் நீடிக்கப்பட்டது. எனினும், செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் மிகவும் மெதுவாகவிருந்தது. | செயற்திட்ட முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகளானது சாத்தியவளக் கற்கைகள், சூழல் மதிப்பீடு, காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றல் செய்முறை போன்றவற்றில் தாமதத்தை ஏற்படுத்துவதால் இது செயற்திட்டக் கிரயம் மற்றும் தேவையற்ற கடப்பாட்டுக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு காரணமாகின்றது. |
| பம்பிங் நிலையங்கள் | | | | |
| வனாத்தமுல்லை | 100 | 97 | | |
| மாளிகாவத்தை | 100 | 76 | | |
| பொரளை | 100 | 64 | | |
| பம்பலப்பிட்டிய | 100 | 99 | | |
| விஸ்ட்வைக் | 100 | 71 | | |
| திம்பிரிகஸ்யாய | 100 | 74 | | |
| சீஎஸ்3 | 100 | 99 | | |
| கம்பனித்தெரு | 100 | 98 | | |
| உந்தி பிரதானிகள் | | | | |
| வனாத்தமுல்ல | 100 | 61 | | |
| விஸ்ட்வைக் | 100 | 61 | | |

| | |
|---|---|
| முகாமைத்துவத்தின் பதில் | தவிர்க்கமுடியாத காரணங்கள் மற்றும் ஒப்பந்த கடப்பாடுகளால் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின் காலதாமதத்திற்கான பிரதான காரணமாக ஒப்பந்தகாரரின் மந்தமான செயலாற்றல் காரணமாகவிருந்தது. |
| கணக்காய்வாளரின் பரிந்துரை | செயற்திட்ட காலம் காலவதியாவதற்கு முன்னர் செயற்திட்ட செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | **தனிப்பட்ட ஆலோசனையாளர்கள்** | | |
| | ஆலோசனை படிகளின் கொடுப்பனவிற்காக 22 நாட்கள் அதிகூடியதாக வேலைசெய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டது. எனினும், கொடுப்பனவு பற்றுச்சீட்டை பரீட்சிக்கும் போது அதிகூடியதாக 22 நாட்களிற்காக பங்குபற்றாதபோது முழுமையான ஆலோசனை படி செலுத்தப்பட்டது என அவதானிக்கப்பட்டது. 2021 சனவரி இலிருந்து நவம்பர் வரைக்கும் ரூபா 3.9 மில்லியன் வேலைசெய்யாத நாட்களிற்காக செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டவாறு மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க ஆலோசனைப் படி செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இணக்கசபைக்காக மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தர்கள் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார்கள் என்பதற்கான எழுத்துமூல சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையென்பதுடன் நியமனத்திற்காக அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று உத்தியோகத்தர்களுக்கு 1.7 மில்லியன் தொகை மூன்று உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இணக்கசபை விடயங்களை மேற்கொள்வதற்கும் சட்டமா அதிபதி திணைக்களத்தின் அரச ஆலோசனையாளர்களிற்கு உதவுவதற்கு நிபுணர்களை தெரிவு செய்யும் முறைமைக்காகவும் செயற்திட்டப் பணிப்பாளருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டது. | கொடுப்பனவிற்கு முன்னர் முறையான அனுமதி பெறப்பட வேண்டும். |

### 3.3 குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | 2010 பெப்ரவரி 15 இலிருந்து 2021 ஆகஸ்ட் 15 வரைக்கும் ஓசீஆர் கடனின் மீளளிக்கப்படாத கடன் மீதி மீது கடப்பாட்டு கட்டணங்களாக ரூபா 122 மில்லியனை பொதுத்திறைசேரி செலுத்தியிருந்தது. | கடன் காலப்பகுதியை தாண்டி செயற்திட்டங்கள் நீடிக்கப்பட்டமையால் கடப்பாட்டுக் கட்டணத்தில் மேலதிகக்கிரயம் ஏற்படுத்தப்பட்டது. | முறையான செயற்திட்ட திட்டமிடல் ஊடாக இந்தக் கிரயம் குறைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சாக்கடைப்பிரிவிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட ரூபா 3.2 மில்லியன் பெறுமதியான நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு முறைமை 2017 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றிருந்தது. | புதிய பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவதற்கு சீஎம்சீ நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு முதலீட்டை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
| --- | --- | --- |
| கொள்கை உதவிக் குழுவின் ஏழு உத்தியோகத்தர்களுக்கு 2021 ஆம் ஆண்டில் ரூபா 2.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒரு கூட்டம் நடைபெற்றிருந்தது. 2021 திசெம்பர் 31 அளவில் செயற்திட்டத்தின் தொடக்கத்திலிருந்து 70 மாதங்கள் காலங்கடந்த போதும் கொள்கை உதவிக் குழுவிற்கு செயற்திட்டத்தின் தொடக்கத்திலிருந்து 2021 திசெம்பர் 31 அளவில் ரூபா 41.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் கொள்கை செயற்திட்டத்தின் உதவிக் குழுவின் பங்களிப்பை அதன் செயன்முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்காமையால் மதிப்பிடப்பட முடியாதிருந்தது. | கொள்கை உதவிக் குழுவிற்குரிய கொடுப்பனவு செயற்திட்ட அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தரின் நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கும் அதன் செயலாற்றலை மதிப்பிடுவதற்கும் பங்களிக்க வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
| --- | --- | --- |
| செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாட்டிற்கு நேரடியாக பங்களிக்ககூடிய 11 பதவிநிலைகளில் 16 வெற்றிடங்கள் இருந்தபோதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான வேலைச்சேர்ப்பு நடைபெற்றிருக்கவில்லை. | நேர்முகத்தேர்விற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவு நிறைவடைந்திருந்தது. | தகைமையுள்ள உத்தியோகத்தருடன் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |